# வடமராட்சி கிழக்கில் தரையிறங்க முயன்ற கடற்படையினர்மீது புலிகளால் தாக்குதல்

நேற்று மாலை கட்டைக்காடு வெற்றிலைக்கேணி கடற்பகுதியில் நிலைகொண்டிருந்தகடற்படைப்படகில் இருந்து கடற்படையினர் தரையிறங்கும் முயற்சி விடுதலைப்புலிகளால் முறியடிக்கப்பட்டதாக முந்திக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன. நேற்று மாலை கடற்படையினர் இரண்டு பாரிய பீரங்கிப்படகுகளில் இருந்து சிறுபடகுகள் மூலம் வெற்றிலைக்கேணி கட்டைக்காடு கடற்கரையில் தரையிறங்க வந்துகொண்டிருந்தனர். இதை அவதானித்த அங்கு நிலைகொண்டிருந்த புலிகள் அணியொன்று கடற்படையினர் வந்துகொண்டிருந்த சிறு படகுகள் மீது சரமாரியான தாக்குதலை கனரக ஆயுதங்கள் கொண்டு நடாத்த ஆரம்பித்தனர். இதனால் கரைநோக்கி வந்துகொண்டிருந்த கடற்படையினரின் இரு படகுகள் சேதமடைந்து நீரினுள் மூழ்கின. இப்படகுகளில் சுமார் இருபது படையினர். இருந்ததாகவும், அவர்களுக்கு என்ன நிகழ்ந்தது என்பது — 04 ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 4 - 50

முரசொலி

முரசு 05 ஒலி 229 பிரசோற்பத்தி ஆனி 31 ( 15 - 07 - 1991 ) திங்கள்

# யாழ்குடாவின் இரு முனையில் உக்கிரமடையும் யுத்தம்

## ஆனையிறவு படையினரை மீட்கும் முயற்சியில் கரையிறங்கிய துருப்புக்கள் நகரமுடியாத நிலை ?

**ஆனையிறவு இராணுவ முகாமில் நேற்றும் ஐந்தாவது நாளாக விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் நடைபெற்றுவரும் கடும் மோதலில் புலிகளால் பிரதான முகாம் நேற்று முற்பகல் சேதத்திற்குள்ளாக்கப்பட்ட நிலையில் தொடர்ந்து மோதல் நடைபெற்று வருகின்றது.**

விடுதலைப்புலிகளின் கடும் தாக்குதல்களை பலவீனப் படுத்த நான்கு பொம்மர்கள் இரண்டு பயணிகள் விமானம் இரண்டு சகடை விமானம் உட்பட இரண்டு ஹெலிகள் தாக்குதல்களை தொடுத்த வண்ணமுள்ளன.

நேற்று முன்தினம் காலை மேற்கொண்ட தாக்குதலில் உப்பளமுகாம் இடிபாடுகளுக்குள் இருந்து உருக்குலைந்த படையினரின் சடலங்களும் பெருந்தொகையான ஆயுதங்களும் வெடிமருந்துகளும் மீட்கப்பட்டுள்ளன.

இதேவேளை படையினருக்கு உதவியாக கட்டைக்காட்டு கடலோரமாக இறக்கப்பட்ட படையினரை —04 ஆம் பக்கம் பார்க்க

## நேபாம் குண்டு வீச்சு

ஆனையிறவு இராணுவ முகாமில் இருக்கும் ஸ்ரீலங்கா படையினர்கள் நேபாம்குண்டுகளை பாவித்து தாக்குதல் நடாத்தியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. 74 ப 11

## படையினருக்கு உதவியாக பீரங்கிப் படகு

கட்டைக் காட்டுப் பகுதியில் இறக்கப்பட்ட படையினருக்கு உதவியாக கடற்கரைப் பகுதியில் இருந்து பீரங்கிக் கப்பல்கள் தீப்பிளம்புகளுடன் ஷெல் தாக்குதல்களை நடாத்திவருகின்றன.

ப-11, 74

## கட்டைக்காடு கடலிலிருந்து கடற்படை பீரங்கித்தாக்குதல்

ஆனையிறவு முகாமிலிருந்து வடகிழக்காக ஐந்து மைல் தொலைவில் வடமராட்சி கிழக்கு கட்டைக்காடுப் பகுதி கடலில் கடற்படை பீரங்கிப் படகுகள் நிலை கொண்டுள்ளன,

நேற்று இப்பீரங்கிப்படகுகளிலிருந்து ஆனையிறவை நோக்கி பீரங்கித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

எனினும் கடற்படையினர் தரையிறங்கும் முயற்சி எதையும் மேற்கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது

79

## வெற்றிலைக்கேணியில் அவ்ரோ குண்டுவீச்சு

வெற்றிலைக்கேணியில் அவ்ரோ குண்டுவீச்சினால் பெண்மணி ஒருவர் காயமடைந்ததுடன் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் உட்பட பத்து வீடுகள் சேதமடைந்தன.

நேற்று முன்தினம் காலை 9. 30 மணிக்கு நடந்த இந்த அவ்ரோ குண்டுவீச்சு வெற்றிலைக்கேணி பிரதான சந்திக்கு அண்மையில் நடைபெற்றது. இச்சம்பவத்தில் மகேந் —04 ஆம் பக்கம் பார்க்க

## சிகிச்சையின்றி மரணம்

ஆனையிறவு இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலின் போது காயமடைந்த இராணுவத்தினருள் 6 சிப்பாய்கள் சிகிச்சையின்றி இறந்துள்ளனர்.

காயமடைந்த சிப்பாய்களை மீட்க விமானப்படையின் ஹெலிக்கொப்டர்கள் முயற்சித்த போதிலும் அவற்றின் மீது புலிகள் கடும் தாக் —04 ஆம் பக்கம் பார்க்க

## மீண்டும் கரையிறங்கிய படை புலிகளால் சுற்றிவளைப்பு

நேற்று மாலை மீண்டும் கட்டைக்காடு கடற்பகுதியில் இருந்த கடற்படைபடகுகள் மூலம் கரையில் தரையிறங்கிய படையினர் புலிகளால் சுற்றி வளைக்கப் பட்டுள்ளதாக பிந்திக்கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

மாலை 5 30 மணியளவில் இரு ஹெலிகப்டர்கள், மூன்று பொம்மர்கள், அவ்ரோ வை-12 விமானம் என்பன தாக்குதல் நடாத்த 15 இற்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் வந்தபடையினர் கட்டைக்காடு கரையில் தரையிறங்கினர்.

— 04 ஆம் பக்கம் பார்க்க

## சுண்டிக்குள பீரங்கித் தாக்கு இரு குடிசைகள் தீக்கிரை

சுண்டிக்குளத்தில் மக்கள் குடியிருப்புக்களை நோக்கிக் கடற்படையினர் ஷெல் தாக்குதல்களையும், பீரங்கித் தாக்குதல்களையும் நடாத்தி வருகின்றனர்.

கடந்த 12 ஆம் திகதி காலை 10 மணி முதல் மாலை வரை இத்தாக்குதல்கள் தொடர்ந்து நடைபெற்றதாகத் தெரியவருகின்றது.

—04 ஆம் பக்கம் பார்க்க

### இந்திய வானொலி செய்தியாளர்

## ஆனையிறவின் வீழ்ச்சி புதிய அத்தியாயமாகும்

ஆனையிறவு இராணுவ முகாம் விடுதலைப்புலிகளிடம் வீழ்ந்தால் இலங்கையில் நடைபெறும் தனிநாட்டுக் கோரிக்கைப்போரில் ஒருபுதிய அத்தியாயம் ஏற்படும்.

இவ்வாறு அகில இந்திய வானொலியின் கொழும்புச் செய்தியாளர் ஆனையிறவு —04 ஆம் பக்கம் பார்க்க

## தாக்குதல் நடத்தும் விமான இலக்கம் ஆனையிறவுமுகாமில் கேட்டுப் பதியப்படுகிறது

ஆனையிறவு முகாமை அண்டிய பகுதிகளில் விமானப்படையினர் தாக்குதல் நடாத்தும் போது உரையாடுவதை எப். எம் மீற்றரில் கேட்கக்கூடியதாகவுள்ளது. தாம் 5,000 அடிக்குமேல் நிற்பதாக விமானிகள் கூறுகின்றனர். விமானங்கள் குண்டு வீச்சு நிகழ்த்தும்போது அந்த அந்த விமானத்தின் இலக்கங்களை ஆனையிறவு முகாம் அதிகாரிகள் கேட்பதும் அறியக்கூடியதாக உள்ளது. ஆனையிறவு முகாம் படையினர் பராவெளிச்சங்களை ஏவி அவ்விலக்கிலிருந்து — 04ஆம் பக்கம் பார்க்க

# பெரிய உப்பள முகாம் புலிகள் அரணாகியது

நேற்று முன்தினம் ஆனையிறவு பிரதான முகாமிலிருந்து சிலயார் தூரத்திலுள்ள பெரிய உப்பளம் மினி முகாம் புலிகளிடம் வீழ்ந்த போது, அம்முகாமின் சில கட்டிடங்களுள் இருந்த இராணுவத்தினரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இவர்களில் சில சிப்பாய்கள் விமானப்படையினரின் குண்டுவீச்சிலேயேஇறந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கைப்பற்றப்பட்ட பெரிய உப்பளம் மினி முகாமின் ஒரு பகுதியை விடுதலைப்புலிகள் தமது பாதுகாப்பு அரணாக மாற்றும் முயற்சியில் நேற்று ஈடுபட்டிருந்தனர். (79)

# உழைப்பால் உயர்ந்த தவில் மேதை சின்னராசா

மங்கள இசைக்கலைஞர்கள் பரம்பரையாக வாழ்ந்து இசைவளர்த்து வருங் கிராமம் இணுவில். 1945, 1946 ஆம் ஆண்டுகளில் நான் சிறுவனாக இருந்தபோது, பெரிய பழனி, சின்னத்தம்பி என்ற இரு புகழ் பெற்ற தவில்வித்துவான்கள் இணுவிலில் இருந்தார்கள். அக்காலத்தில் தவில்வாசிப்பில் அவர்கள் அரசோச்சினார்கள் என்று கூறினால் அது மிகையாகாது.


அதன் பின்பு, அவர்களின் புகழையும், திறமையையும் விஞ்சுமளவிற்கு வளர்ந்து, இசைவளரும் இந்தியாவிலுள்ள அத்தனை தவில் மேதைகளும் மூக்கின் மேல் விரல் வைத்து ஆச்சரியப்படுமளவிற்கு உலகளாவிய புகழ் பெற்றவர் இதே இணுவில் ஈன்ற தட்சணாமூர்த்தி என்ற இளைஞன்.

ஏறத்தாழ அவருக்கு ஒத்த வயதினராக அதே காலப் பகுதியில் அதே இணுவில் கிராமத்தில் மேலும் இரு சிறுவர்கள் தவில் வித்துவான்களாக உருவாகி வந்தனர். ஒருவர் என். ஆர். சின்னராசா; மற்றையவர் ''கணேசுமாமா'' என்றழைக்கப்படும் அவரது தாய்மாமன் எம். கே. கணேசன்.

இவர்கள் இருவரும் மிக இளம் வயதில் சின்னராசா அவர்களின் தமையனாரான நாதஸ்வர வித்துவான் என். ஆர் கோவிந்தசாமி அவர்களின் குழுவில் தவில் கலைஞர்களாக ஏறத்தாழப் பத்து வருட காலம் தொடர்ச்சியாக வாசித்து வந்தார்கள். இந்தியாவில் பழம்பெரும் மேதைகளிடம் குருகுல வாசப் பயிற்சி பெற்ற கோவிந்தசாமி அவர்களின் குழுவில் இவர்கள் இருவரும் செக்கிலிட்ட கரும்பாகப் பயிற்சிபெறவேண்டியதாயிற்று ''கொடுங்கோல் கோவிந்தசாமி'' என பெயர் பெற்றதோடு, எதையுமே அதிதுரித காலத்தில் வாசிக்கும் அவரிடம் தம்பி சின்னராசா எவ்விதப் பயிற்சி பெற்றிருப்பார் என்பதை விளக்கவேண்டியதில்லை. (எந்த மேடையென்றும் பாராமல், எந்தச் சபையென்றும் பாராமல், தாளம் தவறிய இடத்துக் கையில் அகப்பட்ட எதைக் கொண்டும் அடித்து விடும் அண்ணனின் கீழ்ப்பெற்ற பயிற்சிதான் தனக்கு உறுதியான அத்திபாரமாக அமைந்ததெனச் சின்னராசா அவர்கள் கூறுவார்கள்).

இரு சகோதரர்களிடையேயுள்ள உறவில் ஒரு காலகட்டத்தில் இடைவெளி ஏற்பட்டிருந்தபோதும் கூடத் தன்னைத் திறமை சாலியாக்கத் தனது தமையனார் மேற்கொண்ட பிரயத்தனங்களைச் சின்னராசா அவர்கள் நன்றியுடன் நினைவு கூர்ந்தது போல், அவரது அண்ணனும். தான் விரும்பியது போலத் தனது தம்பி ஒரு தவில் மேதையாக உருவாகி விட்டதையிட்டுத் தனது உள்ளார்ந்த மகிழ்ச்சியைத் தெரிவிக்கத் தவறியதில்லை.

இவர்களது குடும்பத்துடன் ஏறத்தாழ நாற்பத்தைந்து ஆண்டுகளாக நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தமையால், இசைவேளாளர்களின் சங்கீத பரிபாஷையிலிருந்து



அவர்களின் இசையோடு சம்பந்தப்பட்ட பல்வேறு விடயங்களையும் நான் அறிந்து கொள்ள ஏதுவாயிற்று.

சின்னராசா அவர்களின் கலைவளர்ச்சிப் பாதை ஒரு மென்மலர்ப்படுக்கையாக இருக்கவில்லை. நாதஸ்வர, தவில் கலைக்கே உரித்தான கடிமான வளர்ச்சிப்பாதையில் அவர் அடிமேல் அடி வைத்துத் தான் தனது திறமையை வளர்த்துக் கொண்டவர். அந்நாட்களில், இந்தியாவிலிருந்து இங்கு வரும் தவில், நாதஸ்வரச் 'சிங்கங்கள்' தொடக்கம் உள்ளூர்ச் 'சிங்கங்கள்' ஈறாக எல்லோருடனும் ஈடாக வாசித்ததோடு, சில வேளைகளில் அவர்களோடு முட்டி மோதிய கட்டங்களையும் நினைவு கூரக் கூடியதாயுள்ளது.

சில கடினமான லய நுணுக்கங்களையும், விவகாரங்களையும், அவை தனது விரல்களிற் சரியாகப் பேசும் வரை திரும்பத் திரும்ப அலுக்காது வாசித்து மெருகூட்டும் பிரயாசை மிக்க கலைஞர் அவர்.

ஒரு கலைஞனுக்கு எல்லா நேரமும் கற்பனாசக்தி செயற்படுவதில்லை அவனுக்கு 'Mood' என்று சொல்லப்படும் உளப்பாங்கு சரியாக அமையும் நேரத்திலேயே அவனது கலைசோபிக்கும். இப்படியாகச் சில சமயங்களில் தனது 'மூட்' சரிவராத பொழுது வெட்கப்படாது தான் தவறு விட்ட நுணுக்கங்களை மீண்டும் மீண்டும் வாசித்துச் சரி செய்யும் சுபாவம் அவருடையது. இதை நாங்கள் எல்லாக் கலைஞர்களிடமும் காணமுடியாது.

1974 ஆம்ஆண்டு கொழும்பு வேல்விழாவில் பல்லவி மேதை திருமெஞ்ஞானம் நடராஜசுந்தரம் அவர்களின் நாதஸ்வரக் கச்சேரிக்குச் சின்னராசா அவர்கள் தவில் வாசித்தார்கள். தவிலில் வாசிக்கும் அத்தனை சொற்கட்டுகளையும் நாதஸ்வரத்தில் வாசிக்கும் அபாரதிறமை பெற்றவர் நடராஜசுந்தரம். லயம் சம்பந்தமான கணிதநுணுக்கங்களிற் கைதேர்ந்தவர். அந்தக் கச்சேரியில் ஓரிரு இடங்களில் ஒரே தடவையில் முழுமையாக வாசிக்கத் தவறிய சில சங்கதிகளை வெட்கப்படாது மீண்டும் ஓரிரு முறை வாசித்துச் சரிசெய்து சபையோரிடமிருந்து ஏகோபித்த பாராட்டுப் பெற்றவர் சின்னராசா அவர்கள். இந்த மனோபாவந்தான் அவரது திறமைக்கு அடிப்படை.

கடந்த பத்து ஆண்டுகளுள் இந்தியாவில் அவர் ஈட்டிய புகழ் அபாரமானது. அங்குள்ள புகழ்பெற்ற தவில் மேதைகளே பயப்படுமளவுக்குக் கணித நுணுக்கங்களோடு கூடிய விவகாரங்களை வாசித்து அவர்களைத் திணறடித்தவர் சின்னராசா அவர்கள். இந்தச்சாதனை இசை வரலாற்றில் அழியாத இடம் பெற்று விட்டது (வளரும்)

நவாலியூர் நா. சச்சிதானந்தன்

---

## அன்னைபூபதி நினைவுப் போட்டி
# பரிசுபெறும் மாணவர் விவரம்

யாழ் மாவட்டம்

மாவட்ட ரீதியாகப் பரிசு பெறுபவர்கள்— கீழ்ப்பிரிவு:- பு செந்தில்குமரன் யாழ் இந்துக்கல்லூரி. மேற்பிரிவு;- அ. சுபாகரன் யாழ் இந்துக் கல்லூரி. கீழ்ப்பிரிவு:- சுன்னாகம் க. சி. சிவஜினி கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை. மேற்பிரிவு சி. சாயீ●வரன் கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை. கீழ்ப்பிரிவு:- மானிப்பாய் சே.ரமே● மானிப்பாய் இந்துக்கல்லூரி, மேற்பிரிவு:- சு சரத்குமார் மானிப்பாய் மெமோரியல் ஆங்கிலப் பாடசாலை.

கீழ்ப்பிரிவு:- ஏழாலை இ. பிரசாந்தன் ஏழாலை மகா வித்தியாலயம், மேற்பிரிவு:- செ சுதாமதி ஏழாலை மகா வித்தியாலயம், கீழ்ப்பிரிவு:- நவாலி எவருமில்லை, மேற்பிரிவு:- ச.சதானந்தன் நவாலி மகா வித்தியாலயம், கீழ்ப்பிரிவு:- உடுவில் பூ. இலங்கேஸ்வரன் இணுவில் சைவ மகாஜனா. மேற்பிரிவு:- மே. யே. ரெறன்ஸ், றொட்றிக்கோ இணுவில் சைவ மகாஜனா. கீழ்ப்பிரிவு:- அச்சுவேலி இ காயத்திரி அச்சுவேலி மகா வித்தி. மேற்பிரிவு:- நா. பாமினி சர●வதி வித்தியாலயம். கீழ்ப்பிரிவு:- கோப்பாய் க. செந்தூர்ப் பதிதா கோப்பாய் மகா வித்தி, கீழ்ப்பிரிவு:- ம. சுதன் கோப்பாய் மகா வித்தி, மேற்பிரிவு:- தி. மதிமோகனா கோப்பாய் கிறி●தவ கல்லூரி, கீழ்ப்பிரிவு:- நீர்வேலி த. ஜெயமாலா நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி, மேற்பிரிவு:- பா. விஜயபாலா அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம், கீழ்ப்பிரிவு:- புத்தூர் எவருமில்லை, மேற்பிரிவு கு. கிருபாகரமூர்த்தி வாதரவத்தை ஸ்ரீவிக்கினே●வரா.

உரும்பிராய் கொத்தணி கீழ்ப்பிரிவு;-ஜோ. மேரிகலைச் செல்வி உரும்பிராய் இந்துக் கல்லூரி. கீழ்ப்பிரிவு:- வசாவிளான்கை .சீதாராமன் வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம். வே. ஸ்ரீ கண்ணன் வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம், மேற்பிரிவு. யாழ்நகர் இ.சிந்துஜா யா/ திருக்குடும்பகன்னியர் மடம் கீழ்ப்பிரிவு. வை.பிரபாகரன் யா/ மத்திய கல்லூரி மேற்பிரிவு. குருநகர் வி.ஜெயமலர் சென்ஜேம்● பெண்கள் பாடசாலை, கீழ்ப்பிரிவு. ம. நிரஞ்சன் சென்சாள்● மகா வித்தியாலயம், மேற்பிரிவு. வண்ணார் பண்ணை தெற்கு ம. சியாமளன் வைத்தீஸ்வர வித்தியாலயம், கீழ்ப்பிரிவு. ச நளினி வைத்தீ●வர வித்தியாலயம், மேற்பிரிவு. கொக்குவில் சா. பிரதீப்ஆனந் கொக்குவில் இந்துக் கல்லூரி கீழ்ப்பிரிவு. து சத்தியசீலன் கொக்குவில் இந்துக்கல்லூரி மேற்பிரிவு. நல்லூர் இ. அனுசியா யா/ கனகரத்தினம் ம ம வித்தியாலயம்,கீழ்ப்பிரிவு. சா. உதயச் சந்திரிகா யா/ கனகரத்தினம் ம. மகா வித்தியாலயம், மேற்பிரிவு. கோண்டாவில் இ குணசீலன் கோண்டாவில் இராமகிருஷ்ணாவித்தியாலயம், கீழ்ப்பிரிவு.

(தொடரும்)

---

# வடமராட்சி கிழக்கில் மலேரியாத் தடுப்பு வேலை

வடமராட்சி கிழக்கில் மூளை,மலேரியா நோய்க்கான தடுப்பு சிகிச்சை ஒருவாரகால இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

யாழ் மாவட்ட மலேரியாத் தடுப்பு இயக்கத்தினால் மலேரியா, மூளைக்காய்ச்சல் நோய்களை தடுக்குமுகமாக இப்பகுதி மக்களுக்கு தடுப்பு குளிசைகள் வழங்கப்பட்டு வந்தன.

இத்தடுப்புக் குளிசைகள் திடீரென முடிவடைந்ததையடுத்து கடந்த ஒரு வாரகாலமாக இந்நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்தன.

மீண்டும் இந்நோய்த்தடுப்பு குளிசைகள் வந்து சேர்ந்ததையடுத்து இப்பகுதியிலுள்ள உடுத்துறைகிராமத்தில்உள்ள மக்களுக்கு நோய்த்தடுப்பு குளிசைகள் வழங்கும்பணி ஆரம்பமாகியுள்ளது.

இதனைத் தொடர்ந்து இப்பகுதியிலுள்ள ஏனைய கிராமங்களுக்கும் இந்நடவடிக்கை வி●தரிக்கப்படும். 50

---

## பிரான்ஸ் வைத்திய சேவை

மந்திகை அரசினர் வைத்தியசாலைக்கு வந்துள்ள பிரெஞ் வைத்தியக்குழு தமது சேவையை மீண்டும் ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (50, 15)

---

# ஆசிரிய மாணவர் இன்று சமுகம் தருக

''கற்பித்தற் பயிற்சியில் ஈடுபட்டுள்ள எல்லா பலாலி ஆசிரிய கலாசாலை ஆசிரிய மாணவர்களும் விரிவுரையாளர்களும் இன்று திங்கள் மீண்டும் கலாசாலைக்கு சமுகமளிக்கும்படி கலாசாலை அதிபர் கேட்டுள்ளார்.

கோப்பாய் பயிற்சி ஆசிரியர் சேவை ஒன்றியத்தின் செயற் திட்டங்களில் இணைந்து சேவையாற்றும் உறுப்பினர்களும். ஏனைய சகல பயிற்சி ஆசிரியர்களும் இன்று திங்கட்கிழமை காலை 9.மணிக்கு கோப்பாய் அசிரிய கலாசாலையில் நிகழவிருக்கும் ''இன்றைய சூழ்நிலையில் நாம் ஆற்ற வேண்டிய சேவைகள்'' பற்றிக் கலந்துரையாட ஒன்றுகூடுமாறு அவசரமாக அழைக்கப்படுகின்றனர்.

## சேரன் முதலிடம்

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி வருடாந்த மெய்வல்லுநர் போட்டியில் சேரன் இல்லம் முதலாம் இடத்தைப் பெற்றது.

சோழன் இல்லம் இரண்டாம் இடத்தையும் பாண்டியன் இல்லம் மூன்றாம் இடத்தையும் பெற்றன.

கல்லூரி அதிபர் நா. ஜெயநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சிக்கு கல்வி அதிகாரி ப. சண்முகராசா பிரதம அதிதியாக கலந்துகொண்டார். (37)

---

# அதிகரிக்கும் தங்கக் கடத்தல்
## 6 மாதத்தில் 106 கிலோ அகப்பட்டது

கடந்த ஆறு மாதங்களில் மட்டும் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் 106 கிலோ 300 கிராம் கடத்தல் தங்கம் அகப்பட்டுள்ளது

கடந்த ஜனவரி முதலான ஆறுமாத காலத்தில் அகப்பட்ட இத்தங்கக் கடத்தல்கள் மூலம் அபராதமாக 5 கோடி 40 லட்சம் ரூபா அறவிடப்பட்டுள்ளது.

---

# ஜோ சிம்மின் கையாள் பொலிஸாரால் கைது

கசினோ சூதாட்டம் வைத்து நடாத்தியதால் நாடு கடத்தப்பட்ட ஜோ சிம்மின் நெருங்கிய ஒருவர் நாட்டை விட்டு வெளியேற முயன்றதாக பொலி● வட்டாரங்கள் தெரிவித்தன.

மலேசிய பிரஜையான இவர் கடந்த வெள்ளிக்கிழமைசிங்கப்பூர் செல்லவிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஜோசிம்மின் முக்கிய ஆவணங்களை இவர் வைத்திருந்ததாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

ஜோசிம்முக்கு பெண்●காரை அரசியல்வாதி கொடுத்தது பற்றியும் இந்த ஆவணங்கள் மூலம் தெரிய வந்துள்ளது.

---

## ஷெல் தாக்குதல்

காரைநகர் வலந்தலையிலுள்ள இராணுவ முகாமிலிருந்து நேற்று இரவும் பொன்னாலை, மூளாய் ஆகிய இடங்களை நோக்கி கடும் ஷெல் தாக்குதல் இடம் பெற்றது.

இதேவேளை கடலில் தரித்து நிற்கும் கடற்படையின் கப்பல்களிலிருந்தும் பீரங்கித் தாக்குதல்கள் கரைப் பகுதிகளை நோக்கி மேற்கொள்ளப்பட்டது. (13)

---

## மத்திய கிழக்கில் இருந்து
# தபால் கந்தோர் மூலம் பணம் அனுப்ப வசதி

மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் புரியும் இலங்கையர்கள் தமது உறவினர்களுக்குப் போஸ்ரல் ஓடர், மணி ஓடர் மூலம் பணம் அனுப்புவதற்கு வசதிகள் செய்யப்பட்டிருப்பதாக தபால் தந்தி தொலை தொடர்புகள் அமைச்சின் வெளிநாட்டுத் தபால் தந்தி கட்டுப்பாட்டதிகாரி தெரிவித்துள்ளார். இத்திட்டத்தின்படி மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் புரியும் ஒருவர் இலங்கையின் எப்பாகத்துக்கும் தபால் கந்தோர் மூலம் போஸ்ரல் ஓடர் மணி ஓடர், அனுப்பலாம்.

★ இம் மாதம் 19 ஆம் திகதிக்கு முன்னர்

# பதிவு செய்யத் தவறும் ஈழத்தமிழர்

## தமிழகத்திலிருந்து வெளியேற்றப்படுவர்

இம்மாதம்19 ஆம் திகதிக்கு முன்னர் பொலிஸ் நிலையங்களில் தமது பெயர்களைப் பதிவு செய்யாத இலங்கைத் தமிழர்கள் உடனடியாக வெளியேற்றப்படுவர் என்றும் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் தமிழக அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை தமிழகத்தில் இருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகள் விரைவாக தாயகம் திரும்புவதற்கான நடவடிக்கைகளை இந்திய அரசும் இலங்கை அரசும் எடுத்துள்ளன. இதன் முதல் நடவடிக்கையாகத் தற்போது இந்தியாவில் இருக்கும் இலங்கை அகதிகளின் பட்டியல் ஒன்றை இந்தியா இலங்கையிடம் கையளித்துள்ளது.

## மாரடைப்பு நோய்க்கு மருந்தாகும் கரட்

இரத்த அழுத்தம், மாரடைப்பு போன்ற நோய்களினால் பாதிக்கப்பட்டவர்கள் கரட்டைச் சாப்பிடுவதன் மூலம் சிறந்த பலனைப் பெறலாம் என சமீபத்திய மருத்துவ ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

கரட்டில் உள்ள ''கரோடீன்'' 'பி' என்னும் சத்து மாத்திரைகளை விடத் தீவிரமாகச் செயலாற்ற வல்லது என்றும் கண்டறிந்துள்ளார்கள்.

கடந்த ஆறு வருடங்களாக இருதய நோயினால் பாதிக்கப்பட்ட 300க்கு மேற்பட்ட நோயாளிகளுக்கு தினமும் 50 மில்லி கிராம் கரட் பச்சையாக உண்ணக் கொடுத்துப் பரீட்சித்துப் பார்த்ததில் வியக்கத் தக்க பலன் கிடைத்திருப்பதாகப் பேர்ஸ்டன் நகரின் மருத்துவ நிபுணரும், விரிவுரையாளருமான கலாநிதி டாக்டர் சார்ள்ஸ் ஹெனெக்கின்ஸ் தெரிவித்துள்ளார்.

தினமும் காலையில் இரண்டு கரட்டைப் பச்சையாக உண்பதால் குருதி உறைதலைக் கட்டுப்படுத்தலாம். அத்துடன் உடலில் உள்ள ஊழைச் சதையையும் அகற்றலாம் என்றும், புற்று நோய்களுக்குக் கரட் அருமருந்தாக விளங்குகிறது என்றும் போஷாக்குச் சத்து நிபுணர் டாக்டர் ஜோன் காப்பர் கூறியுள்ளார். (16)

## மாவீரர் ஞாபகார்த்த விளையாட்டுப் போட்டி

யாழ் கோட்டை இராணுவ முகாம் தாக்குதலின் போது வீரமரணமடைந்த புலிகளின் ஞாபகார்த்தமாக விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுப் பிரிவின் ஆதரவுடன் தும்பளை இளைஞர்களால் நடாத்தப்படும் போட்டிகள் ஆரம்பமாகியுள்ளன

இடபோட்டிகளின் ஆரம்பப் போட்டியாக வீரமரணமடைந்த கப்டன் கருணாநிதி ஞாபகார்த்தமாக விளையாட்டுக் கழகங்களுக்கிடையேயான மென்பந்து துடுப்பெடுத்தாட்டப் போட்டியை கற்கோவளம் சனசமூக நிலைய மைதானத்தில் கப்டன் கருணாநிதியின் தாயார் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார்.

போராளியான திரு. கரிகாலன் புலிக்கொடியை ஏற்றி வைத்தார். கழகக் கொடியை திரு. வி. சேதுநாயகம் ஏற்றி வைத்தார்.

இப்போட்டியில் தம்பசிட்டி உதயதாரகை விளையாட்டுக் கழகமும், அல்வாய் கலைமகள் விளையாட்டுக்கழகமும் மோதி கலைமகள் விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டியது.

நியூ லக்கி விளையாட்டுக் கழகமும், ஸ்கட் விளையாட்டுக் கழகமும் மோதி ●கட் விளையாட்டுக்கழகம் வெற்றியீட்டியது.

புனித மரியாள் விளையாட்டுக் கழகமும் ஸ்ரார் விளையாட்டுக் கழகமும் மோதி புனித மரியாள் விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டியது.

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழகமும் மோதி ஐக்கிய விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டியது. போட்டிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. (15)

## பௌர்ணமியில் கலை நிகழ்ச்சி

பனிப்புலம் அம்பாள் சனசமூக நிலையம் பௌர்ணமி தினங்கள் தோறும் கலை, கலாசார நிகழ்ச்சிகளை நிலையத்தின் முன்பாகவுள்ள திறந்தவெளி அரங்கில் நடாத்துவதற்குத் தீர்மானித்துள்ளது. (13)

## வெண்கட்டித் தொழிற்சாலை மீண்டும் ஆரம்பமாகும்

சங்கானை மகாவித்தியாலயத்தில் நடைபெற்று வரும் வெண்கட்டித் தொழிற்சாலை ''பிளாஸ்ரர் பரிஷ்'' என்ற மூலப்பொருள் இல்லாததால் வெண்கட்டித் தயாரிப்பை நிறுத்தியிருந்தது.

இந்த மூலப்பொருளை கொழும்பிலிருந்து தருவிக்க ஏற்பாடுகள்செய்யப்பட்டுள்ளதால் விரைவில் இத்தொழில் ஆரம்பிக்கப்படும் என்று வித்தியாலய அதிபர் கா சந்திரபாலன் தெரிவித்தார்.

முறைசாராக் கல்விப் பிரிவால் நடாத்தப்படும் இந்தத் தொழிற்சாலை மூலம் யாழ் மாவட்டப் பாடசாலைகளுக்கு வெண்கட்டி வழங்கப்பட்டு வந்தமையும் குறிப்பிடத்தக்கது. (12)

## திருவாசக விழா

குரும்பசிட்டி சன்மார்க்க சபையினர் இம்மாதம் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்குக் கம்பன் கோட்டத்தில் திருவாசக விழா நடாத்துகிறார்கள்.

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் விழாவினைத் தொடக்கி வைக்கிறார்கள்.

புலவர் ஈழத்துச் சிவானந்தன் தலைமையில் நிகழும் கருத்தரங்கில்,அகில இலங்கை கம்பன் கழக அமைப்பாளர் இ. ஜெயராஜ் ''கல்வி என்னும் பல்கடல் பிழைத்தும்'' என்ற பொருள் பற்றியும், தமிழ்த்துறை விரிவுரையாளர் கலாநிதி நா. சுப்பிரமணியன் ''வாசகங் காட்டும் வாசகர்'' என்ற பொருள் பற்றியும் உரை நிகழ்த்துகிறார்கள்.

## ஆசிரியர்க்கு கடன் வழங்க திணைக்களத்தில் பணம் இல்லை!

யாழ் கல்வித் திணைக்களத்திலும் கோட்டக்கல்வி அலுவலகங்களிலும் கடமையாற்றும் ஊழியர்களுக்கும், பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர் மற்றும் ஊழியர்களுக்கும் உடனடியாகத் தேவையான 6 மாத 2 வருடக் கடன்களை வழங்குவதற்கான நிதி கைவசம் இல்லை என சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு யாழ் கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது.

மேற்கூறிய நிதியை மத்திய கல்வி அமைச்சு அனுப்பாததன் காரணமாக ஊழியர்களுக்கு வழங்கப்பட்டு அறவிடப்படும் கடன்களின் கழிவுகளில் இருந்து பெறப்படும் பணமே மாதாமாதம் மேற்கூறிய கடனுக்கு விண்ணப்பிப்பவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனால் கடனுக்கு விண்ணப்பிப்போரின் விண்ணப்பப் பத்திரங்களை கோட்டங்களிலிருந்து அனுப்பும்போது குறிப்பிட்ட தொகையான விண்ணப்பங்களையே அனுப்புமாறும் யாழ் கல்வித் திணைக்களம் சகல கோட்டக் கல்வி அதிகாரிகளுக்கும் அறிவித்துள்ளது. (78)

## யாழ் பொது நூலகத்துக்கு நூல்கள் அன்பளிப்பு

ஆசிய பவுண்டேசன் நிறுவனத்தால் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்துக்கு வழங்கப்பட்ட பெறுமதிவாய்ந்த நூல்கள் செஞ்சிலுவைச்சங்க யாழ்ப்பாணம் கிளை ஊடாக யாழ் மாநகர பொதுசன நூலகத்துக்கு கையாளிக்கப்படவுள்ளன.

இந்நூல்கள் யாழ் செஞ்சிலுவைச் சங்கத்தால் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் எதிர்வரும் 17ஆம் திகதி காலை பத்துமணிக்கு வைபவரீதியாக யாழ் மாநகர ஆணையாளரிடம் கையளிக்கப்படவுள்ளன. 33

## உதவி மருத்துவ அதிகாரிகள் புதிதாகப் பதியப்படுவர்

இலங்கை மருத்துவசபையில் புதிதாக உதவி மருத்துவ அதிகாரிகள் பதியப்படவுள்ளனர்.

நான்கு வருட பயிற்சிக் காலத்தின்பின்குறிப்பிட்டபுள்ளிகளைப் பெறுவோர் மருத்துவ சபையில் உதவி மருத்துவ அதிகாரிகளாகப் பதியப்படுவர்.

குறிப்பிட்ட புள்ளிகளைப் பெறத்தவறுவோர் மீண்டும் குறிப்பிட்ட காலப்பயிற்சி வழங்கப்பட்டு பதியப்படுவர்.

## சிக்கன சேமிப்பு கடனுதவி சங்க அங்குரார்ப்பணம்

யாழ்மாவட்ட சிக்கன, சேமிப்பு, கடனுதவி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் ஆதரவில்சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் சகல கிராமங்களிலும் சிக்கன சேமிப்பு கடனுதவி கூட்டுறவுச் சங்கங்கள் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டு வருகின்றது. கெயர்/யு. எ●. எயிட் விவசாயத்திட்டத்தின் கீழ் இச்சங்கங்களுக்கு ஊடாக சிறுதானியச் செய்கையாளர்களுக்குமண்ணெண்ணை, உரம், கிருமிநாசினி, விதைகள் என்பன வழங்கப்பட்டு வருவதால் மக்களில் பலரும் இச்சங்கங்களில் அங்கத்தவர்களாக சேருவதில் அதிக ஆர்வம் காட்டி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. கடந்த வாரம் மாதகல், வடலியடைப்பு, மானிப்பாய்,நவாலி,சண்டிலிப்பாய் ஆகிய இடங்களில் பல புதிய சங்கங்கள் உருவாக்கப்பட்டன. (13)

### ஆனையிறவு

## புலிகளின் வீரம் பொலிந்து சிறந்தது வெற்றிகள் சேர்ந்தன

ஆனையிறவிலும் எங்கள் புலிகள் தம்
ஆற்றலைக் காட்டுகின்றார்
அஞ்சி ஒடுங்கிய ஸ்ரீலங்கா ராணுவ
அவலத்தை என்ன சொல்வேன்.

நாளை பிறந்திடும் தாயகம் என்றதோர்
நம்பிக்கை கொண்டவர் முன்
வேளை தோறும் அஞ்சி அஞ்சி ஒடுங்கிடும்
ராணுவம் என்ன செய்யும்!

ஹெலிகள் பறந்தன பொம்மர் பொழிந்தன
போயவை ஓய்ந்தனவே
புலிகளின் வீரம் பொலிந்து சிறந்தது
வெற்றிகள் சேர்ந்தனவே.

ஆயிரம் ராணுவம் சூழினும் வென்றிடும்
நெஞ்ச உறுதி கொண்டோர்
தாயகம் ஒன்றிலே தாகம் மிகுந்தவர்
தம்திறன் காட்டுகின்றார்.

வெற்றிமகளை மணந்திட்டதோளினர்
வீரப் பரம்பரையின்
நற்றவமாகவே என்றும் விளங்குவார்
நம்புலி வீரர்களே.

- தமிழ்ஈழப் பாவலன்

## பாஸ்போட் பெறுவதில் வடபகுதி மக்கள் பாதிப்பு

கொழும்பில் பா●போட் எடுக்க விண்ணப்பிக்கும் வடபகுதியைச் சேர்ந்தவர்கள் பா●போட்டை எடுப்பதற்குப் பெரிதும் கஷ்டப்பட வேண்டி உள்ளதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கு உரிய முறையில் விண்ணப்பித்த போதிலும் விண்ணப்பதாரியின் கையெழுத்துப்பிழை சமர்ப்பிக்கும் சான்றிதழ்களில் பிழை என்று விண்ணப்பதாரிகளுக்குக் கடிதங்கள் அனுப்பப்படுகின்றனவாம்.

தரகர்களின் உதவியுடன் விண்ணப்பிப்பவர்களுக்கு எதுவித கேள்விகளுமின்றிப் பா● போட் கிடைப்பதாகவும் அச்செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன. (33)

## இளவாலை சென். ஹென்றீஸ் றோசஸ் இல்லம் முதலிடம்

இளவாலை சென். ஹென்றீ● கல்லூரி வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்ற போது றோச● இல்லம் 190 புள்ளிகளைப்பெற்று முதலாமிடத்தை பெற்று சாம்பியன் வெற்றிக் கேடயத்தை சுவீகரித்துக் கொண்டது. சாம்றொக்● இல்லம் 160 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தையும், ரிற்றஸ் இல்லம் 124 புள்ளிகளைப் பெற்று மூன்றாமிடத்தையும் பெற்றன.

இளவாலை மறை மாவட்ட முதல்வர் அருட்திரு ரெஜி ராஜே●வரன் அடிகளார் இப்போட்டியில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களை வழங்கினார். (13)

## மேலதிகாரியின் அனுமதியின்றி ஊழியர் இடமாற்றம்

மேல் அதிகாரிகளின் அனுமதி இன்றி முல்லைத்தீவு தேசியவீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை ஊழியர்கள் இடமாற்றம் செய்யப்படுகின்றனர்.

வடமாகாணத்தைத் தவிர ஏனைய பகுதிகளுக்குஇவ்ஊழியர்களின் விருப்பத்துடன் இடமாற்றம் நடைபெறுகிறது.

முன்னர் ஊழியர்கள் இடமாற்றம் செய்யப்படுவதானால் மேலதிகாரியின் சிபார்சும் தேவை என்பது குறிப்பிடத்தக்கது.

இதனால் இவ்வலுவலகத்தில் வீடமைப்பு உத்தியோகத்தருக்கும் இலிகிதருக்கும், தட்டெழுத்தாளர்களுக்கும் வெற்றிடம் இருந்து வருகிறது.(38

## 200 பேர் வரையில் இதுவரை இரத்ததானம்

கடந்த 10 ஆம், 12 ஆம் திகதிகளில் யாழ் போதனா வைத்தியசாலை இரத்த வங்கிக்கு 200 பேர் வரையில் இரத்த தானம் செய்துள்ளனர்.

யாழ் கனகரத்தினம் மகா வித்தியாலய மாணவர்கள் 25 பேரும் யாழ் இந்துக்கல்லூரி மாணவர்கள் 15பேரும், பரியோவன் கல்லூரி மாணவர்கள் 4 பேரும், யாழ் புனித சம்பத்தரிசியார் கல்லூரி மாணவர்கள் 08 பேரும், யாழ் திருக்குடும்ப கன்னியர் மட அதிபர் உட்பட மாணவர்கள் 4 பேரும், யாழ் கன்னியர்மட இரண்டு ஆசிரியர் உட்பட 2 மாணவர்களும், யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் 23 பேரும், குருத்துவ கல்லூரி மாணவர்கள் 9 பேரும், சனசமூக நிலையங்கள், பொதுமக்கள் தொண்டர் நிறுவனங்கள் மூலம் இரத்ததானம் செய்தோர் 105பேருமாக மொத்தம் 200 பேர் இரத்ததானம் செய்துள்ளனர். (74)

## பட்டிக்குடியிருப்பில் துணைப்படைவீரர் மரணம்

முல்லைத்தீவு பட்டிக்குடியிருப்பு பகுதியில் ட்ராக்டரில் சென்று கொண்டிருந்த துணைப்படை வீரர் மீது படையினர் தாக்குதல் நடாத்தியதில் சி. சிவராசா என்ற துணைப்படை வீரர் வீரமரணமடைந்தார். இச்சம்பவத்தில் த. ஈஸ்வரன் என்ற பொதுமகனும் கொல்லப்பட்டார்.

மட்டக்களப்பில் நவக்குளம் பகுதியில் விசேட அதிரடிப் படையினர் நடாத்திய தாக்குதலொன்றில் ரூபன் (அம்பாறை) என்ற போராளி வீரமரணமடைந்தார்.

## கட்டாக்காலி நாய்கள் ஒழிக்கப்படுகின்றன

யாழ் நகரப்பகுதியில் கட்டாக்காலி நாய்களை ஒழிக்கும் நடவடிக்கையில் மாநகரசபை தீவிரப்படுத்தியுள்ளது.

கடந்த இருதினங்களில் மட்டும் முப்பத்தைந்துக்கும் மேற்பட்ட கட்டாக்காலி நாய்கள் பிடிக்கப்பட்டன. யாழ் போதனா வைத்தியசாலை வளவுக்குள்ளும் பல நாய்கள் பிடிக்கப்பட்டுள்ளன. (79)

### வெற்றிலைக்கேணி...

திரன் மனோறஞ்சினி என்ற பெண்ணே காயமடைந்தவராவர்.

இச்சம்பவம் நடைபெற்ற இடத்தில் மூன்று குண்டுகள் மாறிமாறிப் போடப்பட்டன. மக்கள் ஏற்கனவே பலர் வெளியேறியிருந்ததால் உயிரிழப்புக்கள் தவிர்க்கப்படக் கூடியதாக இருந்தன (43, 50)

### சுண்டிக்குள...

இத்தாக்குதல் காரணமாக இரண்டு குடிசைகள் தீக்கிரையாக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

கடற்படைத் தாக்குதல் காரணமாக அங்கு தங்கியுள்ள மீனவர்கள் அனைவரும் வெளியேறி வருகின்றனர். (43, 50)

### ஆனையிறவின்...

மோதல் குறித்தான தனது விமர்சனத்தில் குறிப்பிட்டுள்ளார்.

ஆனையிறவு இராணுவ முகாம் வடக்கில் இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த இடமாக இருப்பதினாலேயே இம்முகாமை கைப்பற்றும் முயற்சியில் விடுதலைப்புலிகள் பாரிய தாக்குதலை ஆரம்பித்துள்ளனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## பரீட்சை முடிவுகள்

1990 விசேட க. பொ. த. உயர்தரப் பரீட்சை முடிவுகள் கொழும்பில் வெளியாகியுள்ளதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

யாழ் மாவட்டத்திற்கான பரீட்சை முடிவுகள் வெகு விரைவில் கப்பல் மூலம் அனுப்பி வைக்கப்படுமெனத் தெரிவிக்கப்படுகிறது. (ப-11)

## சாரணர்களுக்கு அழைப்பு

வடமாகாணத்தில் உள்ள சகல சாரணர்களும், திரிசாரணர்களும், சாரண முக்கியஸ்தர்களும் இன்று காலை 9. 30 மணிக்கு ஆஸ்பத்திரி வீதியில் உள்ள பாலம் பொதுப்பணி நிறுவனத்தில் கூடுமாறு வேண்டப்பட்டுள்ளனர்.

### வடமராட்சி...

தெரியவில்லை எனவும் அங்கிருந்து கிடைத்த தகவல் ஒன்று தெரிவிக்கிறது.

கடற்படையினரின் இரு படகுகள் மூழ்கியதையடுத்து மற்றைய படகுகளில் வந்த படையினர் பின்வாங்கி பீரங்கிப்படகுகளுக்கு சென்று விட்டனர் தொடர்ந்து இப்பகுதிகளில் விமானத் தாக்குதல் நடாத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது. (48. 50) 43

## கண்ணீர் அஞ்சலி

### செல்வி பத்மசோதி சண்முகநாதபிள்ளை

செல்வி பத்மசோதி சண்முகநாதபிள்ளை அவர்களின் மறைவையொட்டி எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

அன்னாரின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிராத்திக்கின்றோம்.

சென்றலைற் விளையாட்டுக் கழக அங்கத்தவர்கள்

07071

# இந்தியாவிலுள்ள தமிழ்அகதிகள் பட்டியல் ஸ்ரீலங்கா அரசிடம் வழங்கப்பட்டது

இந்தியாவில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் மக்களை திருப்பி அனுப்பும் முயற்சியில் இந்திய அரசாங்கம் தீவிரமாக இறங்கியுள்ளது,

இதற்கு ஸ்ரீலங்கா அரசும் தனது ஆதரவைத் தெரிவித்துள்ளதாகக்கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தமிழகத்தில் தங்கியுள்ள இலங்கைத் தமிழர்களின் பட்டியலைத் தயாரித்துவரும் இந்திய அரசு இதன் முதற்கட்டமாக அகதிகளின் முதலாவது பட்டியல் ஒன்றை ஸ்ரீலங்கா அரசிடம் வழங்கியுள்ளதாம்.

இலங்கைத்தமிழ் அகதிகளின் பட்டியல் அண்மையில் தமிழக பொலிஸாரிடம் பதிந்தவர்களின் விவரங்களை ஆதாரமாகக் கொண்டே தயாரிக்கப் படுவதாகச் சுட்டிக் காட்டப் படுகிறது.

## காரைநகரிலிருந்து ஷெல் இருவர் பலி; ஐவர் காயம்

காரைநகரில் நிலைகொண்டிருக்கும் படையினர் மூளாய்ப்பகுதிபொன்னாலைப் பகுதி ஆகிய இடங்களை நோக்கி இருபதுக்குமேற்பட்ட ஷெல்தாக்குதல்களை நிகழ்த்தினர். இத்தாக்குதல்களில் இரண்டு வயோதிபப்பெண்கள் பலியாகினர். ஐந்து பேர் காயமடைந்துள்ளனர்.

காரைநகரிலிருந்து இடம்பெயர்ந்து மூளாயில் வசிக்கின்ற திருமதி சுப்பிரமணியம் பாக்கியம் (58) மூளாயைச் சேர்ந்த மற்றொருவயோதிபப் பெண்ணுமே மரணமானவர்களாவர்.

மூளாய் தெற்கைச்சேர்ந்த அருணகிரி (18) திருமதி பத்மாவதி சிவஞானம் (37) உட்பட ஐவர் யாழ் ஆஸ்பத்திரியிலும், மூளாய் ஆஸ்பத்திரியிலும் சிகிச்சை பெற்றுவருகின்றனர். (12 79)

## புலிகள் வெற்றிவேண்டி ஆலயங்களில் வழிபாடு

ஆனையிறவில் கடும்யுத்தம் தொடங்கியதிலிருந்து புலிகளுக்கு வெற்றி வேண்டி பல பொதுமக்கள் யாழ்ப்பாணப் பகுதி ஆலயங்களில் வேண்டுதல் செய்துவருகின்றனர்.

வண்ணார்பண்ணை மேற்கு காளிகோயில், நல்லூர்க்கந்த சுவாமி கோயில் கைலாசபிள்ளையார்கோயில் உட்பட்ட பல ஆலயங்களில் வழிபாடுகள் நடைபெற்றுவருவதைக் காணக்கூடியதாக உள்ளது. 79

## இன்று சந்திக்கவும்

இன்று காலை 12 மணிக்கு கச்சேரியில் கூட்டுறவு ஆணையாளர், தலைவர், பொது முகாமையாளர் ஆகியோர் அரச அதிபரைச் சந்திக்கும்படி வேண்டப்படுகின்றனர். (ப-11)

## நாகர்கோவில் குண்டு வீச்சு

நேற்று நண்பகல் நாகர்கோவில் பகுதியில் இடம்பெற்ற வான் தாக்குதலையடுத்து ஆனையிறவு தாக்குதலால் அங்கு இடம்பெயர்ந்திருந்த குடும்பங்கள் அங்கிருந்து வெளியேறத் தொடங்கியுள்ளனர். (50)

## வடமராட்சி கிழக்கில் ஷெல், குண்டு வீச்சுத்தாக்கு

வடமராட்சி கிழக்கில் மக்கள் குடியிருப்புக்கள் மீது இருமுனைத் தாக்குதல்கள் ஆரம்பிக்க பட்டதைத்தொடர்ந்து எஞ்சியிருந்த மக்களும் முற்றாக வெளியேறி வருகின்றனர்.

வானத்தில் இருந்து விமானங்கள் குண்டுகளைப் போடுவதுடன், ஹெலிகளும் துப்பாக்கிப் பிரயோகம் செய்கின்றன. கடலில் இருந்து கடற்படைக் கப்பல்கள் ஷெல், பீரங்கித் தாக்குதல்களை மேற்கொள்கின்றன. ஆனையிறவு இராணுவ முகாமில் இருந்து எறிகணைத் தாக்குதல்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

இதன் காரணமாக கேவில் தொடக்கம் தாழையடி வரையுள்ள கிராம சேவகர் பிரிவில் எஞ்சியிருந்த மக்களும் தற்போது வெளியேறி வருகின்றனர். 50 43

## பெரிய உப்பள முகாமில் மீட்கப்பட்ட ஆயுதங்கள்

நேற்று முன்தினம் பெரிய உப்பளம் மினிமுகாம் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட போது பல ஆயுதங்கள் புலிகளால் மீட்கபட்டுள்ளன.

- ★ ஜி. பி. எம். ஜி - 1
- ★ ஏ. கே. எல். எம். ஜி - 1
- ★ டொங்கான் - 1
- ★ ரி. 56 - 7
- ★ ரி 81 -2
- ★ ஜி. 3 - 3
- ★ ரி. 56 ரவைக்கூடு - 4
- ★ ஜி. 3 ரவைக்கூடு - 5
- ★ ஏ. கே. எல்.எம்.ஜி ரவைக் கூடு - 2
- ★ ஏ.கே எம் எம்.ஜிலிங்-290
- ★ ஜி.பி எம்.ஜி ரவைகள்-610
- ★ ஐ. எம் ரவைகள் - 2120
- ★ நேட்டோ ரவைகள் - 80
- ★ தலைக்கவசம் - 1
- ★ தொலைத் தொடர்பு சாதனம் - 1
- ★ பி.'ரி. ரி - 2

என்பனவே புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களாகும்.

### சிகிச்சை...

குதலை நடாத்தியதனால் காயமடைந்த சிப்பாய்கள் கடந்த ஐந்து தினங்களாக மீட்கப்படாது முகாமினுள்ளேயே இருக்கின்றனர்.

### யாழ் குடா...

எதிர்த்து புலிகள் இரண்டாவது முனையில் தாக்குதலை நடாத்திவருகின்றனர்.

ஆனையிறவு படையினரை மீட்கவே இப்படையினர் கரையிறங்கியிருப்பதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன. ப11 74 79

### மீண்டும்...

தரையிறங்கிய படையினர் அனைவரும் தற்போது புலிகளின் சுற்றிவளைப்பினுள் சிக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கட்டைக்காடுப்பகுதி ஆனையிறவு முகாமிலிருந்து ஐந்தரை மைல் தொலைவில் உள்ள கடலோரக் கிராமம் என்பது குறி பிடத்தக்கது.

### தாக்குதல்...

500 யார் தூரத்துக்கு அப்பால் தாக்குமாறு கூறுகின்றனர். விமானிகள் இலக்குகள் தெளிவாக தெரியவில்லை எனக் கூறுவதையும் கேட்கக் கூடியதாக உள்ளது. (50)

## மாமடுவில் தாக்குதல்

வவுனியா மாமடுப் பகுதியில் சிங்கள ஊர்காவற்படையினர் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலில் ஒருவர் பலியானார் மற்றைய படையினர் தப்பியோடினர்.

நேற்று முன்தினம் நடைபெற்ற இச்சம்பவத்தின் போது பலியான ஊர்காவற் படையினரிடமிருந்து 303ரைபிள் 12 ரவைகள் புலிகளால் மீட்கப்பட்டன.

## பலாலியிலிருந்து இரவு ஷெல் ஒருவர் பலி, இருவர் காயம்

பலாலி இராணுவ முகாமிலிந்து நேற்று இரவு 8. 30 மணியளவில் யாழ்குடாநாட்டை அண்டிய பகுதிகளிலும் மற்றும் இதரபகுதிகளிலும்மேற்கொள்ளப்பட்டஆட்லறி ஷெல் தாக்குதலில் ஒருவர் ஸ்தலத்தில் பலியானார்.

நுணாவில்பகுதியில் விழுந்த ஷெல் தாக்குதலில் வ. லூர்த்தநாயகம் (40) என்பவரும், சவாகச்சேரிப் பகுதியில் விழுந்து வெடித்த ஷெல்லில் கனகேஸ்வரி கணபதிப்பிள்ளை (40) என்பவரும் பலத்த காயத்துக்குள்ளாக்கப்பட்டுள்ளனர்.

யாழ்குடாநாட்டை நோக்கி 15க்கும் மேற்பட்ட ஷெல்கள் ஏவப்பட்டன. இதில் சங்கத்தானையைச் சேர்ந்த ஒருவர் ஷெல்தாக்குதலில் பலியாகியுள்ளார். இவரது பெயர் விவரங்கள் செய்தி அச்சுக்குப் போகும் வரை கிடைக்கவில்லை. (ப-11, 74, 79)

## விமானப்படையின் பொதி புலிகளால் மீட்பு

ஆனையிறவு முகாம் பகுதியில் ஸ்ரீலங்கா விமானப் படையினரால் வீசப்பட்ட பெருமளவு பொதிகள் விடுதலைப்புலிகளால் மீட்கப்பட்டன.

இவற்றினுள் பெருமளவு கிளைமோர் கண்ணிவெடிகளும் வெடிமருந்துகளும் வயர்களும் இருந்ததாகத் தெரியவருகிறது. (48)

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சுவீதி 'லக்ஷ்மி பில்டிங்'கில் உள்ள அச்சகத்தில் 15.07.91 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.